காலை 10 மணி என்று இருக்கிறது. இதன் மீது போக்குவரத்துத் துறையின் கருத்துரை கேட்கப்பட்டுள்ளது. அந்தக் கருத்துரை வந்த பிறகு, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எல். பலராமன்: சென்னை மாநகராட்சியை தென் சென்னை, வட சென்னை என்று பிரித்து கால நேரத்தை ஒதுக்குவதன் காரணமாக வெளி கிராமங்களில் காலையிலேயே பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்பதால், அவற்றிற்கும் இதுபோன்ற அறிவுரை அரசிடமிருந்து வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி சென்னை நகரைப் பொறுத்தது. வட சென்னை, தென் சென்னை என்று இரண்டு பகுதியாகப் பிரிப்பதன் மூலமாக பஸ்ஸில் உள்ள நெரிசலைக் குறைக்கலாம் என்ற அடிப்படையில் போக்குவரத்துத் துறையைக் கேட்டு இப்படி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அதை மாற்றுகின்ற இந்த நேரத்திலும் போக்குவரத்துத் துறையின் கருத்துரை கேட்கப்பட்டிருக்கிறது.

UNESCO Team.

*231 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the UNESCO Team made a study of the strategy for rural development in the State; and

(*b*) if so, the salient features thereof?

'யுனெஸ்கோ' குழு

திரு. பி. ஆர் தாமஸ் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 'யுனெஸ்கோ' குழு, கிராம வளர்ச்சிக்கான வாய்ப்புக் கூறுகள் குறித்து ஆய்வு செய்தது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் சிறப்புக் கூறுகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவானது முன்னோடித் திட்டமாக கல்வி மூலம் ஊரக வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தையே யுனஸ்கோ குழுவானது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கூட்டு செயல்முறை ஆய்வுத் திட்டத்தின்கீழ் ஒன்றாக, மேற்கண்ட திட்டத்தை ஆய்வு செய்வதற்காக முடிவு செய்தது. இதன்படி இக்குழு செம்மஞ்சேரித் தோப்பு, திருவெஞ்சேரி, சாலிக் கிராமம், சிட்லபாக்கம் ஆகிய ஊர்களில் 23-10-1977-லிருந்து 26-10-1977 வரை வருகை தந்து அந்த ஊரிலுள்ள கிராம மக்களுக்கும், பள்ளிக் கல்வியை முடிக்காமல் விட்டுச் சென்றவர்களுக்கும் சத்துணவு, உடலாரோக்கியம், சுயவேலை, உள்ளூர் சாதனங்களை வைத்துக் கொண்டு தொழிற் பயிற்சிக் கல்வி கற்றல் முதலியவை பயிற்றுவிப்பது சம்பந்தமாக நடத்தப்படும் தொழிற் கூடங்களைப் பார்வையிட்டு அம் முறைகளின் தன்மைகளை ஆய்வு செய்தது.

Graduate Teachers.

* 232 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that 31st of October, 1977 was declared as a holiday for all High Schools in the State ;

(*b*) whether the Government are aware that many Graduate Teachers have been forced to go on casual leave or on loss of pay, for not attending the schools on that day ; and

(*c*) if so, the action taken thereon?

பட்டதாரி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் எல்லாப் பள்ளிகளுக்கும் 31-10-1977 ஆம் நாளன்று விடுமுறையாக அறிவிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) அந்நாளன்று பள்ளிகளுக்கு வாராமையினால், தற்செயல் விடுப்பு அல்லது சம்பளம் இல்லாத விடுப்பில் செல்லுமாறு பல பட்டதாரி ஆசிரியர்கள் வற்புறுத்தப்பட்டனர் என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இதுபற்றி எந்த ஆசிரியரிடமிருந்தும் புகார் மனு பெறப்படவில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.